பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 04 2025 **WEDNESDAY** **12.40 PM**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்காற்றும் என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

2. கடந்த நிதியாண்டில் நாட்டின் இயற்கைசார் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி 5 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. நேஷனல் ஹெரால்டு வழக்கில் அமலாக்கத்துறையின் நடவடிக்கை சட்டப்பூர்வமாக அமைந்துள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

4. ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் மத அடிப்படையில் உறுப்பு நாடுகளை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

5. முனிச் ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் **Ben Shelton** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்காற்றும் என்று வடகிழக்கு பிராந்திய வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற வடகிழக்கு முதலீட்டாளர் மாநாடு குறித்து வெளிநாட்டு தூதர்கள் இடையே பேசிய அவர், வடகிழக்கு பகுதியானது பொருளாதார ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக திகழ்கிறது என்று தெரிவித்தார்.

தென்கிழக்காசிய நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் அப்போது எடுத்துரைத்தார்.

<<<<<<>>>>>>

கடந்த நிதியாண்டில் நாட்டின் இயற்கைசார் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி 5 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2023-24-ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், இது 35 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தானியங்கள், மசாலாப் பொருட்கள், மூலிகைகள் உட்பட இயற்கைசார் உணவுப்பொருட்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் பூஜ்யம் புள்ளி மூன்று ஏழு டன்னாக இருந்ததாக அச்செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2030-ஆம் ஆண்டில் இயற்கைசார் உணவுப்பொருட்களின் ஏற்றுமதியை இரண்டு பில்லியன் டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர் சுந்தரலிங்கத்தின் 255-வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்கு எதிராக வீரமுடன் போராடியவர் சுந்தரலிங்கனார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி, தூத்துக்குடி மாவட்டம் கவர்னகிரியில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் சுந்தரலிங்கத்தின் உருவச்சிலைக்கு தமிழக அரசு சார்பில் ஆட்சியர் திரு இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

<<<<<<>>>>>>

நேஷ்னல் ஹெறால்டு வழக்கில் அமலாக்கத்துறையின் நடவடிக்கை சட்டப்பூர்வமாக அமைந்துள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

இவ்வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி மற்றும் ராகுல்காந்தி மீது மத்திய அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ள நிலையில், புதுதில்லியில் அது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத், இந்த விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி ஊழலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார்.

அமலாக்கத்துறையின் இந்த நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், காங்கிரஸ் கட்சி போராட்டங்களில் ஈடுபடுவதாக திரு ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

இதற்கிடையே, அமலாக்கத்துறையின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தில்லி உள்ளிட்ட பல பகுதிகளில் காங்கிரஸ் கட்சியினர் இன்று போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது ரயில் போக்குவரத்து தொடங்கியதன் 172-ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதுதொடர்பாக, ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 1853-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஆம் தேதியன்று வரலாற்று சிறப்புமிக்க மும்பை – தானே இடையேயான முதல் ரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அன்றிலிருந்து தொடர்ந்து ரயில்வே மக்கள் சேவையாற்றி வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

**‘Bori Bunder-**லிருந்து, 14 பெட்டிகளுடன் புறப்பட்ட இந்த ரயில் தானே சென்றடைந்தது. இதில் 400 பேர் பயணித்தனர்.

34 கிலோமீட்டர் தொலைவை இந்த ரயில் ஒரு மணிநேரம் 15 நிமிடத்தில் கடந்து சென்றது.

**<<<<<<>>>>>>**

பீகார் மாநில சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சித் திட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இந்த பயிற்சியில் பீகாரை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட முகவர்கள் பங்கேற்றுள்ளனர்.

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவைத்தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<<<>>>>>>**

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தர் பகுதியில் பாதுகாப்புப்படையினருக்கும், மாவோயிஸ்டுகளுக்கும் நேரிட்ட சண்டையில் இரண்டு மாவோயிஸ்டுகள் உயிரிழந்தனர்.

**Kondagaon, Narayanpur** மாவட்ட எல்லையில் உள்ள கிளாம்-பர்கம் வனப்பகுதியில் நேற்று மாலை பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இந்த தாக்குதல் நடைபெற்றது.

இந்த தாக்குதலில் உயிரிழந்த இரண்டு மாவோயிஸ்டுகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், ஏகே-47 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் காவல்துறை கூறியுள்ளது. அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

புதிய வருமான வரி மசோதா தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

பிஜேபி உறுப்பினர் திரு **‘Baijayant Panda** தலைமையிலான இக்குழுவில் 31 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

வரவிருக்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் இக்குழு தமது அறிக்கையை தாக்கல் செய்யும்.

முன்னதாக, பட்ஜெட் கூட்டத்தொடரின் முதலாவது பகுதியின்போது இந்த மசோதா மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர், இது நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

**<<<<<<>>>>>>**

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் மத அடிப்படையில் உறுப்பு நாடுகளை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில், புதிய முன்மொழிவுகளை அறிமுகப்படுத்தும் வகையில் நியூயார்க் ஐ நா தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட விவாதத்தின்போது ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி **Parvathaneni Harish** இதனை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு கவுன்சிலில் மண்டல அடிப்படையிலான பங்கேற்புக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

பிரேசில், ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட ஜி-4 நாடுகளும் இக்கோரிக்கைக்கு தங்களது எதிர்பை தெரிவித்துள்ளன.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் விருதுநகர் சம்பா மிளகாய்க்கு மத்திய அரசு புவிசார் குறியீடு வழங்கியுள்ளது.

பாரம்பரிய பொருட்கள் உற்பத்தி மற்றும் தயாரிப்பினை ஊக்குவிக்கும் வகையில் அரசு வழங்கிவரும் புவிசார் குறியீட்டினால் சம்பா மிளகாய்க்கு நல்ல விலை கிடைக்கும் என்று விருதுநகர் மாவட்ட விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

லிபியா கடல் பகுதியில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் **Sirde** பகுதியில் நேரிட்ட இந்த விபத்தில் பாகிஸ்தானை சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அந்நாட்டு பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

முனிச் ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் **'Ben Shelton '** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போடடியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-3 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **'Jamie Murray - '** அமெரிக்காவின் ராஜீவ் ராம் இணையை வென்றது.

-------------

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சீனாவின் **Aoran Wang** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>>

சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில் இந்தியாவின் தனிஷா கிராஸ்டோ – துருவ் கபிலா இணை 17-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

பி வி சிந்து, லக்ஷயா சென் ஆகியோர் 18-ஆவது இடத்தில் உள்ளனர்.

------------------

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கிப்போட்டியில் பஞ்சாப் அணி பட்டம் வென்றது.

உத்தரப்பிரதேசத்தின் ஜான்சியில் நடைபெற்ற இப்போட்டியில் மத்தியப்பிரதேசம் இரண்டாவது இடத்தையும், உத்தரப்பிரதேசம் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

---------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி தில்லியில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>